**<u>Sub Court, Eraniel</u>**

O.S. No.17/2022
Date: 02.02.2026.
வா.சா.1 - திரு.ராஜகுமார்
சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.

<u>2 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

வழக்கு 4 பட்டிகை சொத்துகள் எனது தாயார் பெயரில் விலையாக வாங்கப்பட்டது என்றால், சரிதான். அது எனது தந்தையின் உழைப்பினால் வந்த பணத்தில், எனது அம்மாவின் பெயரில் வாங்கப்பட்டது என்பற்கு நீதிமன்றத்தில் ஆதார ஆவணங்கள் தாக்கல் இல்லை என்றால், எனது தகப்பனார் தான் வேலை பார்த்தார். எனது தகப்பனாரின் பெயரில் வாங்கிய வேறு சொத்துகள் உண்டு என்றால், அதுவிபரம் எனக்கு தெரியாது. எனது தகப்பனார் அவ்வாறு தனது பெயரில் வாங்கிய சொத்துகளை நான் உள்நோக்கத்துடன் இந்த வழக்கில் பட்டிகையாக சேர்க்கவில்லை என்றால், சரிதான். எனது தகப்பனார் அரசு ஊழியர் என்றாலும், அரசின் உரிய அனுமதி பெற்று சொத்துகளை வாங்கலாம் என்றால் அவ்வாறு வாங்கமுடியாத காரணத்தினால் தான் எனது அம்மாவின் பெயரில் வாங்கினார். எனது தகப்பனார் மதுபழக்கம் உடையவர் என்பதால், அவருக்கு எந்தவிதமான சேமிப்பு கிடையாது என்றால், அவருக்கு மதுபழக்கம் கிடையாது. தற்போது என்னிடம் காட்டப்படும் செய்தி தாள் ஒளிநகலில் உள்ள நபர் எனது தகப்பனார் போலதான் தெரிகிறது. அதில் உள்ள விபரங்களை என்னால் கண் கண்ணாடி இல்லாமல் படிக்க முடியாது. <u>அந்த பத்திரிக்கை விளம்பரத்தின் நகல் பி.வா.சா.ஆ–1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.</u> (ஒளிநகல் என்பதாலும், பத்திரிகை விளம்பரம் என்பதாலும் வாதி தரப்பு வழக்கறிஞரின்

ஆட்சேபணையடன் குறியீடு செய்யப்படுகிறது. இது சம்பந்தமாக 2007ம் ஆகஸ்டு 1ம் தேதி எனது தகப்பனாரும், எனது சகோதரர் கிருஷ்ண குமாரும் மது அருந்தி பல வாகனங்களை மோதி விபத்து ஏற்படுத்தியதாக குற்ற வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் அதுவிபரம் எனக்கு தெரியாது. எனக்கு 2005ல் கிறிஸ்தவ மதபடி திருமணம் நடந்து நானும் கிறிஸ்தவராக மதம் மாறிவிட்டேன் என்றால், சரிதான். 2011ல் எனது தகப்பனார் இந்துவாக வாழ்ந்து இறக்கும்போது நான் கிறிஸ்தவர் என்றால், நாங்கள் ஒரே வீட்டில் இருந்தோம். 2005 முதல் இன்றுவரையில் நான் கிறிஸ்தவர் என்றால், சாட்சி பதில் ஏதும் கூறவில்லை. பின்னிட்டு சாட்சி கிறிஸ்தவர் என்கிறார். நான் கிறிஸ்தவராக மாறிய பிறகு இந்து வாரிசுரிமை சட்டப்படி நான் பெற்றோரிடமிருந்து சொத்து உரிமை கோரமுடியாது என்றால், சாட்சி பதில் ஏதும் கூறவில்லை. எனது தாயார் 2ம் பிரதிவாதியாகிய எனது சகோதரிக்கு 5 செட்டில்மென்ட் ஆவணங்களை 2005 மற்றும் 2007 ல் எழுதிக்கொடுத்தார் என்றால், சாட்சி பதில் ஏதும் கூறவில்லை. அந்த செட்டில்மென்ட் ஆவணங்களை ரத்து செய்தவற்காக தான்இந்த வழக்கு செய்கிறேன் என்றால், சரிதான். அந்த 2005–2007 கால கட்டத்தில் நானும் எனது அம்மாவுடன் ஒரே வீட்டில் தங்கியிருந்தேன் என்றால், சரியல்ல. 2005 ல் எனக்கு திருமணம் ஆகி கருமன்கூடலுக்கு போய்விட்டேன். எனது வழக்குரையிலும் நான் எனது தாயாரின் வீட்டு முகவரியை தான் எனது முகவரியாக கொடுத்திருக்கிறேன் என்றால், சரிதான். எனவே மேற்படி எனது தாயார் , எனது சகோதரியின் பெயரில் எழுதிவைத்த 5 செட்டில்மென்ட் ஆவணங்களை பற்றி எனக்கு விபரம் தெரியும் என்றால், சரியல்ல. இந்த விபரங்கள் 06.02.2015 ல் தான் தெரியும் என்று நான் வழக்கிற்காக

தவறுதலாக குறிப்பிடுகிறேன் என்றால், சரியல்ல. எனக்கு 06.02.2015 ல் செற்றில்மென்ட் ஆவணங்களை பற்றி விபரங்கள் எனக்கு எப்படி தெரியவந்தது என்றால், ஊர்மக்கள் சொன்னதன் அடிப்படையில் பத்திரம் எடுத்து பார்த்தேன். 2005–2007 செட்டில்மென்ட் பத்திரங்கள் பற்றி ஊர் மக்களுக்கே தெரியும், ஆனால் எனக்கு தெரியாது என்று சொல்வதற்கு வாய்பில்லை என்றால், யாரும் எனக்கு சொல்லவில்லை. மேற்படி செற்றில் மென்டில் பத்திரங்களில் குறிப்பிட்ட சொத்துகள் எனது தாயாரின் தனிப்பட்ட சொந்தமான சொத்துகள் என்றால், சரியல்ல. எனது தாயார் House Wife தான். மேற்படி சொத்துகள் எனது தாயாரின் தனிப்பட்ட சொத்துகள் என்ற நிலையில் நான் அவற்றில் உரிமை கோரமுடியாது என்றால், சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து சரியென ஒப்புக்கொண்டு என் முன்னிலையில் கையெழுத்துச் செய்தார்.

சார்பு நீதிபதி,
இரணியல்.